**பள்ளேபொல பிரதேச சபை - 2023**

----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பள்ளேபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பள்ளேபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை- |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டிற்காக அவ்வாண்டிலேயே கிடைத்திருந்த ரூபா 191,235 ஆன நீதிமன்றத் தண்டப் பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கம் செய்து சரி செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முன்பள்ளி வாடகை மற்றும் புறநெகும கட்டிடத்தின் வாடகை வருமானத்தின் மொத்தம் ரூபா 46,054 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,805,368 ஆன 03 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 2,633,724 ஆன பொறுப்பு விடயமொன்று நிலையான சொத்துக்கள் பதிவேடு, களஞ்சிய | ஆவணங்களை நாளது வரையாக்கி தகவல்களைத் தேடி 2024 ஆம் ஆண்டில் சரியான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு | கணக்கு மீதிகளுக்குரிய ஆவணப்படுத்திய தகவல்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

பதிவேடு மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுப்பதாக

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 15(3) (இ) பிரிவு | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையில் பிரதேச சபை நிறைவேற்றியிருந்த நோக்கங்கள் எதிர்கால எதிர்பார்ப்புகள் பிரதான செயலாற்றல் குறி காட்டிகள் மற்றும் வளப் பயன்பாடு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 59 | சபை அதிகார பிரதேசத்தில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கைத்தொழில் மற்றும் வர்த்தக வியாபாரங்கள் தொடர்பாக ஆண்டின் ஆரம்பத்தின் போது கணிப்பீடொன்று மேற்கொண்டு பட்டியலொன்று தயாரிக்கப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக அனுமதிப்பத்திரங்கள் வியாபார வரிக்காக கணிப்படொன்று மேற்கொண்டு வருவதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) உள்ளூராட்சி மன்ற கடிதங்கள் | | | |
| -------------------------------- | | | |
| 2021 நவம்பர் 12 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/3/2/3 ஆம் இலக்க கடிதத்தின் 03 ஆம் பந்தி | ரூபா 870,789 தொகை செலுத்தி உழவு இயந்திர டேரலர் திருத்தத்திற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கடிதத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,916,319 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,403,216 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,559,600 | 2,441,566 | 2,466,260 | 433,954 | 3,469,600 | 1,540,208 | 1,520,113 | 500,480 |
| (ii) | வாடகை | 5,949,000 | 4,776,939 | 4,499,260 | 548,710 | 5,958,000 | 3,988,182 | 3,690,591 | 271,062 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,560,000 | 1,035,580 | 1,035,580 | - | 1,312,000 | 801,396 | 921,596 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 46,914,500 | 26,890,656 | 32,870,465 | 14,731,094 | 39,634,500 | 28,524,412 | 25,732,119 | 21,259,261 |
| | மொத்தம் | 56,983,100 | 35,144,741 | 40,871,565 | 15,713,758 | 50,374,100 | 34,854,198 | 31,864,419 | 22,030,803 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| ஒரு அலகிலிருந்து நிலுவை வீதவரி மீதி ரூபா 5,000 ஐ மிகைத்த 11 வீதவரி அலகுகளில் இருந்து 02 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் நிலுவை வீதவரி ரூபா 84,071 தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்** | | |
| மத்திய மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அல் | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை யும் முத்திரைக் |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 883,893 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,008,795 ஆக இருந்தது. | நடவடிக்கை எடுப்பதாக | கட்டணங்களையும் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் நீர் மாதிரி பரிசோதனை பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற 06 நீர் செயற்திட்டங்களின் 04 நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அப்பரிசோதனை அறிக்கையின் நீரின் தரத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை காரணமாக 1576 நீர் பாவனையாளர்களுக்கு தரத்துடனான சுத்தமான நீரை வழங்குவதற்கு சபை தவறியிருந்தது. | நீர் மூலாதாரங்களில் தரத்தை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 42,263,812 | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வருமானத்தை அறவிடல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| ஆக இருந்தது. அதில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 41,699,551 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 550,035 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய அபிவிருத்தி செயற்திட்ட கடன் கொடுத்தோர் மீதி ரூபா 53,637,875 ஆக இருந்தது. அதில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 41,485,941 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 59 தளபாடங்கள் மற்றும் அலுவலக அலகுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | அடுத்த இறுதிக் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 முதல் 2022 ஆம் காலப் பகுதியில் 196 கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப ்பட்டு இருந்த போதும் அதில் 158 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்காக இணக்கச் | குறைபாடுகளை பூர்த்தி செய்யாமை காரணமாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதாக | இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டியதுடன் பின் தொடர் நடவடிக்கையும் |

| | | | |
|---|---|---|---|
| | சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வில்லை. அக்காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படாத 52 விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும் . |
| (ஆ) | சபைக்கு உரிய 06 நீர் முன்மொழிவுகள் கணக்காய்வு திகதியில் 88 நீர்மானிகள் செயற்பாடுகள் இல்லாமல் இருந்த போதும் அச்செயற்பாடற்ற நீர்மாணிகளை திருத்துவதற்கோ அல்லது அதற்கு பதிலாக புதிய நீர்மானிகளைப் பொறுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 950 ஆன நிலையான நீர் கட்டணம் ஒன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலையான நீர் கட்டணம் ஒன்று மாத்திரம் அறவிடப்படுவதாக | நீர்மானிகளைப் பொருத்தி கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

**3.4 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய ரூபா 3,826,818 கூட்டுத்தொகையான 02 கொங்கிரீட் கலவை இயந்திரங்கள் மற்றும் 03 வாகனங்களும் 02 முதல் 15 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | ஏல விற்பனை செய்வதற்கு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ள உள்ளூராட்சி மன்ற பொறியியலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்களை திருத்தம் செய்வதற்கோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பிரதேசத்தினுள் பயன்படுத்தப்படும் ரூபா 972,961 ஆன மயானங்கள் 13 ஏக்கர் 02 ரூட் 18.5 | - அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கையேற்பதற்கு நடவடிக்கை | உரிய காணிகளின் உரித்தினைக் |

| | | |
|---|---|---|
| பேர்ச் அளவிலான ஏனைய 16 காணித் துண்டுகளின் உரித்து கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுப்பதாக | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்து ஊழியர்கள் நிரந்தர பதிவியிலிருந்து புறம்பாக அலுவலக வேலைகள் மற்றும் ஏனைய கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதன் காரணமாக வீதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளையும் நூலக செயற்பாடுகளையும் போதியளவு நிறைவேற்றக்கூடிய சிக்கலொன்று இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | தற்போதுள்ள பதவியணியினர் நிறுவன கடமைகளுக்காக போதியளவில் இல்லையென டுள்ளதாக | ஊழியர்களை உரிய பதவியில் ஈடுபடுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாட்டை நிச்சயமாக இனங்காணாமல் முன்னுரிமை படி பொறியிலாளர் மதிப்பீடு தயாரிக்கப் படாமல் 42 அபிவிருத்தி செயற் திட்டங்களின் மொத்தம் ரூபா 16,800,000 ஆன மதிப்பீட்டு பெறுமதி உள்ளடக்கப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது அவ்வாறே பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் பல சந்தர்ப்பங்களின் போது பொது சபையினால் திருத்தம் செய்யப்பட்டிருந்தன. | பொறியியலாளர் மதிப்பீட்டின் பேரில் அபிவிருத்தி செயற் திட்டங்களுக்காக பாதீட்டு மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறியியலாளர் மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |